Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 38—No. 11

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 38 | விசுவாவசு கார்த்திகை 1965 நவம்பர் | இதழ் 11

உள்ளுறை — பக்கம்

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.

சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

ஆண்டுச் சந்தா ரூபா. 3 தனிப்பிரதி அணா 4

சமாஜச் செய்திகள்

28—11—'65 ஞாயிற்றுக்கிழமை காலை 9–30 மணிக்கு சமாஜச் செயற்குழுக் கூட்டம் அலுவலகத்தில் நிகழும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

மாங்காடு ஸ்ரீ சிவசண்முகானந்த பக்தஜன சபையினர் கந்தர் சஷ்டி விழா குறித்துச் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். 28—10—65 வியாழன் மாலை திரு மணலி இராமகிருஷ்ண முதலியார் அவர்கள் தலைமையில் நம் சமாஜத் தலைவர் திரு கோ. மு. முத்துசாமி பிள்ளை (I.A.S. ஓய்வு), திரு நல். முருகேச முதலியார், திரு அம்பை சங்கரனார், திரு நே. த. கிருஷ்ணசாமி முதலியார், திரு கொ. நீ. சிங்காரவேலு (செயலாளர்), திரு V. ஆறுமுக முதலியார், திரு மா. ப. தியாகராஜ முதலியார் முதலியோர் "முருகன் பெருமை" குறித்துப் பேசினர். குன்றத்தூர் பஞ்சாயத்து ஒன்றிப்புத் தலைவர் திரு M. V. சோலையப்பன் அவர்கள் வரவேற்புரையுடனும் திரு M. R. துரைசாமி ஐயர் அவர்கள் நன்றியுரையுடனும் இக்கூட்டம் இனிது முடிந்தது. திரு. V.M. பொன்னம்பலனார் திரு சுப்பிரமணிய முதலியார், திரு கா. வி. அருணாசல முதலியார், திரு க. ஆ. கணபதி முதலியார் ஆகியோர் இது குறித்து எடுத்துள்ள முயற்சி போற்றத்தக்கது.

நம் சமாஜச் சார்பில் ஸ்ரீ மெய்கண்ட தேவர் திருநாள் 31—10—65 ஞாயிறு காலை 9 மணிக்கு திருவல்லிக்கேணி பெரிய தெரு அரசடி கற்பக விநாயகர் வசந்த மண்டபத்தில் நிகழ்ந்தது. தவத்திரு அழகர் அடிகளார் "மெய்கண்டார்" என்னும் பொருள்பற்றிச் சிறந்த முறையில் சொற்பொழிவாற்றினார்கள்.

நம் சமாஜ மணி விழா திசம்பர் 31, சனவரி 1, 2ஆம் நாட்களில் சிதம்பரத்தில் இராமசாமி செட்டியார் உயர்நிலைப் பள்ளியில் நிகழும். சைவர் மாநாட்டிற்கு அருள் மொழி அரசு சிவத்திரு கிருபானந்தவாரியார் அவர்களும் சைவ இளைஞர் மாநாட்டிற்கு திரு A. P. திருஞானசம்பந்தம் பிள்ளை, M.A., L.T., (மாநிலக் கல்லூரி வடமொழிப் பேராசிரியர்) அவர்களும் மாதர் மாநாட்டிற்கு திருமதி கருமுத்து தியாகராஜச் செட்டியார் அவர்களும் தலைமை தாங்குவார்கள். பிற விளக்கமான விவரங்கள் யாவும் அடுத்த இதழில் இடம் பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்,

Reg. M. 2330 உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 38 | விசுவாவசு கார்த்திகை 1965 நவம்பர் | இதழ் 11

திருவாசகம்—கோகழி

(ஆசிரியர்)

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகத்துள் ஐந்து இடங்களில் கோகழியைக் குறிப்பிடுகின்ருர்.

1. சிவபுராணம் அடி 3:

   கோகழியாண்ட குருமணிதன் தாள்வாழ்க.

2. போற்றித்திரு அகவல் அடி 157:

   கோகழி மேவிய கோவே போற்றி

3. குயிற் பத்து பாட்டு 6 (351):

   கொம்பின் மிழற்றும் குயிலே
   கோகழி நாதனைக் கூவாய்

4. பண்டாய நான்மறை, பாடல் 1 (625)

   ....கடையேனைத்–தொண்டாகக்
   கொண்டருளும் கோகழி எம் கோமாற்கு
   நெஞ்சமே
   உண்டோமோ கைம்மாறு உரை

5. பண்டாய நான்மறை பாடல் 6 (630):

நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள்
போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசைப்—பண்ணின்
மொழியாளோ டுத்தர கோசமங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்.

இவ்வைந்து இடங்களிலும் பொருந்தும்படியாக கோகழி என்ற சொல்லின் கருத்து யாது, கோகழி ஒரு தலமானுல் அத்தலம் எங்குள்ளது என்ற கேள்விகளுக்குப் பலரும் ஒப்புக் கொள்ளத்தக்கதான ஒருவிடை இதுவரை தோன்றவில்லை.

கோகழி என்பது பற்றிப் பல கருத்துக்கள் இது வரை சொல்லப்பட்டுள்ளன. (1) கோகழி என்பது பெல்லாரி ஜில்லாவிலுள்ள கோகழி என்ற ஊர். (2) கோகழி என்பது கழுமலம்—சீர்காழி. (3) கோகழி என்பது திருவாவடுதுறை. (4) கோகழி என்பது திருப்பெருந்துறை; இக் கருத்துக்களை ஆராய்ந்து கோகழி என்பது யாது என்று முடிவு செய்ய வேண்டும்.

பெல்லாரி ஜில்லாவிலுள்ள ஊர் என்று சொன்னவர், சமாஜக் காரியதரிசியாகவும் தலைவராகவும் இருந்த மா. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள். அவர் பல கருத்துக்களையும் ஆராய்ந்து திருவாசகம் 630–ஆம் பாட்டில் கோகழி–பெருந்துறை என்று இரண்டு இடங்களில் குறிப்பிடப்பட்டதால் இரண்டும் வெவ்வேறு தலங்கள் என்று முடிவு செய்தார். கன்னட தேசத்தில் பெல்லாரி ஜில்லாவில் ஹடகள்ளி தாலுக்காவிலுள்ள ஓர் ஊரே கோகழி என்று விரிவாக ஆராய்ந்து குறிப்பிட்டிருக்கிறுர். 'ஆதியில் கன்னட தேசம் தமிழ் வழங்கும் நாடாகவே இருந்தது. இன்றும் அது சிறந்த வீர சைவ நாடாக விளங்குகிறது. அங்குள்ள கோகழியில் வீரசைவமே இன்று விளக்கமுற்றிருக்கிறது, நேச நாயனுரின் அவதாரத் தலமாகிய காம்பீலியும் இதன் பக்கத்திலுள்ளது. திருக்கோகர்ணம் என்ற சிறப்பான பாடல் தலமும் அங்குள்ளது. பெல்லாரி நஞ்சன்குடி முதலிய ஊர்களில்

உள்ள திருக்கோயில்களில் அறுபத்து மூவர் சிலைகள் காணப்படுகின்றன. கன்னட மொழியில் உள்ள சில கல்வெட்டுக்கள் கி. பி. 1158 இல் வீரபாண்டிய தேவன் கோகழி நாட்டை ஆண்டான் என்று கூறுகின்றன. பல பண்டிதர்களும் லகுலீச மரபின் பெருங்குரவர்களும் பல சைவ மடங்களும் அங்கு இருந்தமை தெரிகிறது. ஆகவே இச்சூழ்நிலையிலுள்ள கோகழியே குருமணியாக வந்து தம்மை ஆண்ட பெருமானுக்குரிய இடம் என்று மாணிக்க வாசகர் பாராட்டும் கோகழியாகும்' என்பது முதலியா ரவர்கள் எழுதியுள்ளவற்றின் சாரம்.

தென்பாண்டி நாட்டிலே வாதவூரில் பிறந்து, மதுரை யில் அமைச்சுத் தொழில் நடத்தி, திருப்பெருந்துறையில் குருமூர்த்தமாக எழுந்தருளிவந்த சிவபெருமானால் ஆட் கொள்ளப்பெற்று, சோழ நாட்டில் சிதம்பரம் சென்று, நடராஜப் பெருமானோடு இரண்டறக் கலந்த மாணிக்க வாசகர் கன்னர தேசத்தில் உள்ள, இன்று எவ்விதத் திலும் விளக்கமில்லாத, ஒரு சிற்றூரைச் சென்று தரிசித் தார். அவ்வூரைப் பல பாடல்களில் சிறப்பாகக் குறிப் பிட்டார் என்பது சாமானியப் பகுத்தறிவுக்கும் பொருந் தாத செய்தி. சைவர் யாரும் இதை ஒப்புக்கொள்ள மாட்டார். மாணிக்கவாசகர் காலத்துக்கு முன்பும் பின் பும், இன்றும்கூட, இவ்வூர் தமிழ் நாட்டின் சமயத் தொடர்போ இலக்கியத் தொடர்போ எதுவும் பெற்ற தில்லை.

கோகழியில் தமக்குப் பெருமான் அருள் செய்த மையை நெகிழ்ந்த உள்ளத்தோடு மிக்க பெருமிதம் தோன்ற மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார். கோகழி யாண்ட குருமணி, கோகழி மேவியகோ, கோகழிநாதன், கோகழி எம்கோமான், கோகழிக்கு அரசு என்ற தொடர் களைக் காண்க. இவ்வளவு பெருமைக்குரிய கோகழி நாதன் சிறிதும் தொடர்பில்லாத கோகழி என்ற பெல் லாரிச் சிற்றூரில் இருப்பவன் என்று எண்ணுவது திரு வாசகத்திற்குப் பொருந்தாது. தமிழ் நாட்டில் வீர சைவத் தொடர்பு ஏற்பட்டது மிகவும் பிந்திய காலத் தில். (12 ஆம் நூற்றாண்டு) பெல்லாரி–கோகழியில் வீர

சைவம் இருக்கிறதென்றால், அதற்கும் மாணிக்கவாசகருக்கும் தொடர்பு கூற எந்த நியாயமுமில்லை.

ஆனால் ஒன்று நாம் கருதலாம். மேலே குறித்த கல்வெட்டின் காலத்தைப் பார்க்கும்போது, மாணிக்கவாசகர் பாடிய கோகழியின் பெருமையை உணர்ந்து பிற்காலத்தோர் புதிய ஒரு சிற்றூர் அதே பெயரால் அமைத்தார்கள் என்று கூறுவது பொருந்துவதாகும். கோயிலாகிய திருச்சிற்றம்பலத்தை நாயன்மார்கள் பாடியபிறகு, எத்தனையோ புதிய ஊர்களுக்குத் திருச்சிற்றம்பலம் என்றே பெயர் வைத்துக்கொண்டிருப்பதை நாம் அறிவோம். அதே போல இக்கோகழியும் பழைய பெயரைப் பெற்றுப் புதியதாகத் தோன்றிய ஓர் ஊர் எனக் கருதலாம். எனவே, நாம் மாணிக்கவாசகரைக் கன்னர தேசத்துக் குரியவரென்றோ, கன்னடத் தொடர்புடையவரென்றோ கூறுவதில் எவ்விதப் பொருத்தமுமில்லை என்பது தெளிவாகும்.

சைவப் பெரியாராகிய சு. நடேச பிள்ளையவர்கள், மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் பற்றி ஆங்கிலத்தில் சென்னைச் சர்வகலாசாலை இதழ் ஒன்றில் ஒரு கட்டுரை மூன்று ஆண்டுகளுக்கு முன் எழுதி வெளியிட்டார். கோகழியாவது திருப்பெருந்துறை அன்று, பாலசுப்பிரமணிய முதலியார் குறிப்பிட்ட பெல்லாரிப் பகுதியே என்பது அவர் கருத்து. 'அப்பகுதியிலிருந்து ஒரு குருவானவர் திருப்பெருந்துறைக்கு வந்து வாதவூரரை ஆட்கொண்டார். கோகழிநாடு என்ற பெயர் இரு சாசனங்களில் கன்னட மொழியில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடம்பர் குலத்தலைவர்கள் அங்கு 3–4 ஆம் நூற்றாண்டுகளில் அரசாண்டனர். 'அதெந்துவே' என்று மாணிக்கவாசகர் கூறுவதால் (அறு+பத்து எந்து-கன்னடச்சொல்) அவருக்குக் கன்னட மொழிப் பழக்கமுண்டு; ஆகவே குருவானவர் கன்னடக் கோகழி நாட்டினர் என்பது பொருத்தமே. 'சந்திர தீபத்துச் சாத்திரனாகி' என்று திருவாசகம் (கீர்த்தித் திருவகவல் அடி 93) கூறுவதால், இக்குரு வங்காளத்தில் சந்திரத்வீபம் என்ற இடத்தில் இருந்த சந்திரகோமி என்ற வடமொழியாசிரியராவார்;

இவர் வடமொழி வியாகரண நூலாசிரியர். இவரையே மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார். இவர் புத்த சமயத்தைப் போற்றியவர். இவரிடம் இருந்தே மாணிக்கவாசகர் புத்த சமய அறிவு பெற்றிருக்க முடியும். சந்திர கோமி கி பி. 465—544 இல் வாழ்ந்தமையால், மாணிக்கவாசகர் காலமும் இதுவேயாகும்' என்பது அவர் எழுதியவற்றின் சாரம்.

பிள்ளையவர்கள் ஆராய்ச்சியே தொழிலாகவுடையவரல்லர். பொழுது போக்காகவே செய்தவர். சைவசீலர், பக்குவமான உள்ளம் படைத்தவர். மேற்கூறிய பெரியார் இருவர் கருத்தையும் நாம் நன்கு ஆராயக் கடமைப்பட்டிருந்த போதிலும், கோகழியிலிருந்து வந்த ஓர் அந்தணரே பெருந்துறையில் மாணிக்கவாசகருக்குக் குருவானார் என்பதை, சைவர் மட்டுமல்ல, தமிழர் யாரும், ஆராய்ச்சி உடையார் யாரும், ஒப்புக்கொள்ளவியலாது. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன் கன்னடத்தில் இலக்கியமே இல்லை என்பது சரித்திரம். சில ஆயிரம் ஆண்டுகள் சிறந்த இலக்கிய வளம் பெற்றிருந்த தமிழ் மொழியில் தோன்றிய கல்விமானும் மந்திரியுமான வாதவூரர் இலக்கியமே இல்லாத ஒரு மொழியில் வந்த கோகழியாரிடம் உபதேசம் பெற்றார் என்பது ஆராய்ச்சிக்குப் பொருந்தாது அக்குரு எந்த மொழியில் உபதேசித்தார்? ஏன் அவர் திருப்பெருந்துறைக்கு வரவேண்டும்? இலக்கிய வளமின்றிக் கருத்துக்கள் வளர்ச்சி பெற முடியுமா? இத்தகைய கேள்விகள் மிகப் பல. எந்து என்ற சொல் வந்த வரலாறும் மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சியும் இங்கு எடுத்துக் கொண்ட பொருளுக்கு அப்பாற்பட்டவை. ஆகவே, பெல்லாரி நாட்டுக் கோகழி என்று நாம் கொள்வதில், எண்ணற்ற, தீர்க்க முடியாத, மரபுக்கு முற்றிலும் முரணான இடர்ப்பாடுகள் உள்ளன என்று மட்டும் கூறி இவ்விடத்தில் நிறுத்திக் கொள்வோம்.

இனி அடுத்த கருத்தாகிய சீகாழி என்பதை வே. மு. ஸ்ரீனிவாச முதலியார் குறிப்பிட்டிருக்கிறார். ஐந்தாவது இடத்தில், 'நண்ணிப் பெருந்துறையை கோகழிக்கரசை (பாட்டு 630)' என்று இரண்டு இடங்களை ஒரே பாடலில்

குறிப்பிட்டமையால் இரண்டும் வெவ்வேறு இடங்கள் என்று பிறர் பலரும் கருதுவதுபோல இவரும் கருதுகிறார். கீர்த்தித் திருவகவல் அடி 54 இலும் 88 இலும் முறையே அடிகள் 'திருவார்பெருந்துறைச் செல்வனாகி' என்றும் 'கழுமலமதனில் காட்சி கொடுத்தும்' என்பவற்றை அருளி இருத்தலாலும், திருவாசகத்தே பலவிடத்தும் சிவபுரம்—கழுமலம் (காழி)—ஆழி என்றும், திருக்காழி அல்லது சீகாழி என்னும் திருப்பதியினுக்குப் பெயர்களாகக் கருதலாலும் இக்கீர்த்தித் திருவகவலகத்தே கழுமலம் என்ற பெயரினைக் குறித்ததனால் கோகழி என்னும் பெயரினைக் குறியாது விட்டிருத்தலாலும், அடிகள் கோகழி என்னும் பெயராக திருக்காழி அல்லது சீகாழி என்னுந் திருப்பதியினையே குறித்தனர் எனப் பொருள் கொள்ளுதலே கவிக் கருத்தாகும்.

"கொழுமை+கோடி என்ற இவ்விரு சொற்களுங் கூடிய மரூஉவின் பகுதியாய்த்திரிந்து ஒரு சொல் நேர்மைத்தாய்க் கோகுடி என நின்றாற்போல, கொழுமை+காழி என்ற இவ்விரு சொற்களுங்கூடி மரூஉவின் பகுதியாய்த் திரிந்து ஒரு சொல் நேர்மைத்தாய்க் கோகழி என நின்று வளமுடைய காழி நகர் எனப் பொருள் தந்து நின்றன."

கழுமலத்தின் பன்னிரு பெயர்களுக்குத் தனிப்பதிகமே சம்பந்தர் பாடினார். காழி என்று எங்கும் சொன்னாரேயன்றி, ஓரிடத்தும் கோகழி என்று சொன்னதில்லை. கழுமலதனில் காட்சி கொடுத்தது போலப் பூவணம், வெண்காடு, தேவூர், ஆரூர் முதலான பல ஊர்களை இதே முறையில் தொடர்புபடுத்தி வாதவூரடிகள் கூறுகிறார். இவை யாவும் கோகழியாகலாமா? என்ற ஆராய்ச்சியில் இறங்கிப் பயனில்லை. ஆகவே கோகழி என்பது சீர்காழி என்ற கூற்றுப் பொருந்தாது என ஒதுக்க வேண்டியதே.

இனி, மூன்றாவதாகிய திருவாவடுதுறை என்ற கருத்தை ஆராயலாம். முதல் முதலாக உரை வெளியிட்ட வாசுதேவ முதலியார் திருவாவடுதுறை என்று குறிப்பிட்டார். பின் வந்தோர் பலரும் அதை அப்படியே தழுவிக் கொண்டனர். முருகேச முதலியார், மாசிலாமணி

முதலியார் ஆகிய பழைய உரைகாரர்கள் அப்படியே எழுதி விட்டார்கள். 'நண்ணிப் பெருந்துறை' என்ற பாட்டில் பெருந்துறை–கோகழி என்ற இரு பெயர்கள் வருவதால், திருப்பெருந்துறை திருவாவடுதுறை என்ற இரு வேறு தலங்களைக் கூறுவது இவர்களுக்கு மிகவும் சௌகரியமாகி விட்டது, இவர்களுள் சிலர், திருவாவடு துறை என்ற கருத்துக்குத் தங்கள் ஆற்றலுக்கு ஏற்றபடி விளக்கமும் கூறியிருக்கிறார்கள். "கோகழி–பசுத்தன்மை கழிதல். இப்பொருளில் அது திருவாவடுதுறையைக் குறிக்கும். கோ—பெரிய, கழி—துறை; இப்பொருளில் அது திருப்பெருந்துறையைக் குறிக்கும். அடிகள் காலத் திற்கு முன்னமே நவகோடி சித்தபுரமென்னும் திருவாவடு துறையிலே இறைவன் பலர்க்கும் அருள் புரிந்திருத்தல் கூடும். கோகழி இத்திருப்பதிக்கே பெரு வழக்கான பெயர். திருப்பெருந்துறையென்ற பொருள் அடிகள் வரலாற்றிற்கு மிகவும் பொருத்தமானது"—இவ்வாறு கா. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் எழுதியிருக்கிறார். பெரு வழக்கு என்று இவர் குறிப்பிட்டாரேயன்றி எந்த வழக்கும் உண்மையில் இல்லை; இவர் காட்டவும் இல்லை. எனினும், 630 ஆம் பாட்டு எல்லோருக்கும் இவருக்கும் தொந்தரவு கொடுப்பதால் இந்த இடத்தில் இவரும் திருவாவடுதுறை என்றே எழுதி விட்டார்.

காழித்தாண்டவராயர் இவ்விடத்தில் திருப்பெருந் துறை என்றும், திருக்கோகழிநாதன் என்றும் அப்படியே கூறி விட்டார், விளக்கவில்லை. இராமநாத பிள்ளை உரை யும் திருவாவடுதுறை என்றே கூறும். டாக்டர் போப் போன்றோர் பலரும் திருவாவடுதுறை என்றே கூறுகிறார் கள்.

ஆனால் நவநீதகிருஷ்ண பாரதியார், திருவாவடுதுறை என்பதை வற்புறுத்தி எழுதுகிறார். பின்வருவனவற் றைக் காண்க: "கோகழி என்பது திருவாவடுதுறையை. திருவாவடுதுறை என்றே எல்லாரும் உரைத்துப் போந் திருக்கவும் மற்றதனை அடிகள் கோகழி எனக் குறித் தனரேயன்றித் திருவாவடுதுறை எனக் கூறிற்றிலர். திருவாவடுதுறைக்குக் கோகழி—கோமுத்தி எனவும்

பெயர்கள் உள என்பதை இத்தல வரலாறுகள் வல்லார் வாய்க் கேட்டுணர்க. இனி கோகழி என்றது திருப் பெருந்துறையை எனச் சாதிப்பர் ஒரு சாரார், குயிற் பத்து மூன்ருவது திருப்பாடற்கண் உத்தரகோசமங்கை யும், ஆருவது திருப்பாடற்கண் கோகழியும் ஏழாவது திருப்பாடற்கண் பெருந்துறையும் கூறப்படுகின்றன. ஆரும்பாடற்கண் கூறப்படுகின்ற கோகழி என்றது பெருந்துறையாகுமேல், மூன்ரும் பாடலில் கூறப்படுகின்ற உத்தரகோசமங்கையும் பெருந்துறையேயாகும். உத்தர கோசமங்கையும் பெருந்துறையும் ஒன்றெனப்படா, வேறெனவேபடும் என்பது வெளிப்படையாதல் போலக் கோகழியும் பெருந்துறையும் ஒன்றெனப்படாவாய் வேறெனவேபடும். அங்ஙனமாகவும், கோகழி என்ற தற்கு நலிந்து பொருள் கூறி, அது பெருந்துறையேயாகும் என நாட்டுதல் வலியற்றதாகும். மேலும், நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல—எண்ணியெழு கோகழிக்கரசை என்புழியும், அவ்விரு தலங்களும் வேரு தல் கண்கூடு. கோகழிக்கரசு என்றது ஆங்குள்ள சிவ போதி விருட்சத்தை. 'சேர்ந்தேன் சிவ போதியின் நீழ லின் (89)' என்பது திருமந்திரம். அரசின் அடி அயனுக வும், நடு அரியாகவும், முடி அரனுகவும் கொண்டு ஏத்தி வணங்கி வலம் வருதல் வழக்கம். இதனுலும் அது சிவ மாதல் தெளியப்படும். கோகழிக்குத் (திருவாவடு துறைக்கு) தலவிருட்சம் அரசென்பது அறியப்பட்ட தொன்று. இன்னேரன்னவற்ருல் கோகழி என்பது திருவாவடுதுறையாதல் தெளியப்படும்.''

இவ்வுரை முழுமையும் பொருந்தாத கூற்றுக்கள் கொண்டது. குயிற்பத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட தடவை மாணிக்கவாசகர் ஒரே தலப் பெயரைக் கூறக்கூடாது என்று இவராக நினைத்துக் கொண்டு இதற்கு ஒரு சமா தானம் தேடுகின்ருர். பெருந்துறை 2, 7 இலும், உத்தர கோசமங்கை 3 இலும், கோகழி 6 இலும் குறிப்பிடப் பட்டன. குயில்பத்து தில்லையில் அருளியதாகத் தலைப்பு பழமையாக உள்ளது. தில்லையில் இருந்து வாதவூரடிகள் தமக்கு உபதேசம் செய்து ஆட்கொண்ட குருநாதனுக்கு உரிய, தம் வாழ்க்கையில் தொடர்பு பூண்ட, தலங்களா

கிய உத்தரகோசமங்கையையும் திருப்பெருந்துறையையும் நினைத்துப் பாடுகிறார் என்றே கருதுவோம். திருவாசகப் பதிகங்கள் முழுமையிலுமே இந்த நிலையைக் காணலாம். இதை விட்டு, கோகழி திருவாவடுதுறை என்று சாதிப்பதும் கோகழி பெருந்துறையானால் உத்தரகோசமங்கையும் பெருந்துறையாக வேண்டும் என்று கூறுவதும் பிழைபட்ட வாதங்கள். மேலும் கோகழிக்கு அரசு என்ற இடத்தில் அரசு என்ற சொல் குருமணி, கோ, நாதன், கோமான் என்பதுபோல, தலைவன் என்று பொருள்படும் சொல்லாகக் கொள்ளாமல், அரசமரம் என்று இப்பெரியார் பொருள் கொண்டது இவருடைய பிழையேயன்றிப் பாடலின் பிழையன்று. அன்றியும், அரசு போதிமரமானாலுங் கூட, கோகழி என்று பெருந்துறையையே இரண்டாம் முறை குறிப்பிட்டதாகக் கருதலாம். இச்சொல் அரசு எனும் சொல்லுக்கு அடையாதலால் இரண்டாவது தலமாகக் கொள்ள வேண்டியது இல்லை; இதன்படி பெருந்துறை என்பதே நியாயம். மேலும், அடிப்படையில் இங்கு பெருமுரண்; பெருமான் குருந்தின்கீழ் எழுந்தருளி வந்து வாதவூரை ஆட்கொண்டரேயன்றி அரசின் கீழ் அன்று

தண்டபாணி தேசிகரவர்கள் தருமபுரம் பதிப்பில் திருப்பெருந்துறை என்று கோகழியாண்ட குருமணி (1) கோகழி எம் கோமாற்கு (626) என்ற ஈரிடங்களிலும் கூறிவிட்டு, குயிற்பத்தில் திருவாவடுதுறைப் பெருமான் என்று எழுதினார். கோகழியாண்ட குருமணி பெருந்துறைப் பெருமானேயன்றி வேறு யாரும் அல்லர் என்ற தெளிவே, பின்னர் இவருக்கும் ஏனையோருக்கும் 630-ஆம் பாட்டில் திகைப்பு உண்டாக்குகிறது. எனினும், இதே ஆசிரியர் திருவாவடுதுறை உரைப் பதிப்பாகிய பெரிய புத்தகத்தில் அபிமானம் பற்றிக் கோகழி திருவாவடுதுறை என்று எழுதிப் பெரிய ஆதாரங்களெல்லாம் காட்டுகின்றார்.

"கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க. திருவாவடுதுறையை இராசதானியாகக் கொண்டு ஆண்ட குருமணியின் திருவடி வாழ்க. திருவடி வாழ்க என்பதற்

குப் பழையவுரைகாரர் திருவடி என் மனத்தை விட்டுப் பிரியாது வாழ்வதாக என உரை காண்பர். திருவைந் தெழுத்தைத் தந்து அதன் வடிவாகத் தனித்திருத்தலேயும் விளக்கியருளிய உபகாரி குருமணி என்பார், குருமணியின் தாளே வாழ்த்துகின்முர். குருமணி குருவில் மணிபோன் றவர்; பரமாசாரியன் என்பதாம்.

"கோ—தலைமை, பெருமை. கழி—துறை. கோகழி திருப்பெருந்துறை என்பாரும் உளர். வாதவூரடிகட்கு இறைவன் குருவாக எழுந்தருளித் திருவாவடுதுறையில் உபதேசித்தாக வரலாறு ஒன்றும் இல்லாமையால் கோகழி திருவாவடுதுறையெனல் பொருந்தாது எனவும் கூறுவர். மணிவாசகப் பெருந்தகை தில்லைக்கு எழுந் தருளும் வழியில் திருவாவடுதுறைக்கு வந்து மாசிலாமணி யீசரை வழிபட்டுச் சிலநாள் தங்கியிருந்தார். ஒரு நாள் மாசிலாமணியீசர் குருந்தடிக் குருமூர்த்தியாகக் காட்சி வழங்கினுர். அடிகளார் கண்டு பேரானந்தம் உற்றனர் என்பது தலபுராண வரலாறு; ஆதலின் கோகழி என்ப தைக் கண்ணழித்துக் காரணப் பெயராகக் கொண்டு திருப் பெருந்துறை எனல் வேண்டா என்க."

அபிமானம் வேறு, உண்மை யாராய்ச்சி வேறு. அபி மானத்தோடு ஆராய்ச்சியில் புகுந்தால் அது கண்ணை மறைத்துவிடும். மாணிக்கவாசகர் வரலாற்றை ஆராயும் போது பின்வந்த தலபுராணங்களை நம்பக் கூடாது. பெரிய புராண நாயன்மார் வரலாற்றில் சம்பந்தமில்லாத பல கதைகள் பல தலங்களில் வழங்கிவருகின்றன. தலப் பெருமைக்காக இவை சொல்லப்பட்ட கதைகளே யன்றி நாயன்மார் வரலாற்றுக்குச் சம்பந்தமில்லை. அப்பர் சுவாமிகளுக்குப் பாண்டுரோக மிருந்தது, பாண்டூரில் வழி பட்டு ரோகத்தைப் போக்கிக் கொண்டார் என்பது பாண்டூர்க்கதை. இதற்கும் அப்பர் வரலாற்றுக்கும் என்ன தொடர்பு?

இதுபோன்றதே திருவாவடுதுறைத் தல்புராணமும் மாணிக்கவாசகர் வரலாறும். இப்புராணத்துள் திருவாத வூரருக்கு அருள் புரிந்த அத்தியாயத்தில் ஆசிரியர் இங்கு சிவபிரான் குருந்தின் கீழ் இருந்த கோலத்தை மாணிக்க

வாசகருக்குக் காட்டினுரென்றும் இங்கிருந்த அருட்டுறை மடத்திலிருந்துகொண்டு அவர் தாம் செய்திருந்த திருவாசகத்தைக் கோவைப் படுத்தினுர் என்றும் கூறுகிருர். இக் கதைகளுக்கும் சம்பிரதாயமாய் வழங்கி வந்து சைவ உலகம் ஏற்றுக் கொள்ளுகிற மாணிக்கவாசகர் வரலாற்றுக்கும் சம்பந்தமேயில்லே. இவ்வளவும் வெறும் புனேந்துரை.

இப்புராண ஆசிரியரான சாமிநாதத் தம்பிரான் என்பவர் 17-ஆம் நூற்ருண்டின் முடிவில் வாழ்ந்து இப்புராணம் செய்தார் என்பர். கேட்ட கதைகளேயெல்லாம் சேர்த்துக் கொண்டிருக்கிருர். திருவாவடுதுறைக்கு ஏற்றம் கற்பித்தால் ஆதீனத்திற்குப் பெருமை என்று கருதி அவர் இக்கோமுத்தி நகருக்குக் கோகழி என்ற நாமம் கூறினுர் மாணிக்கவாசகர் என்று பாடினுர். இவர் இவ்வாறு பாடியதனுலேயே இவ்வூர் கோகழியாகி விடாது.

இந்த அபிமானமே தேசிகரையும் தருமபுரம் பதிப்பில் கோகழி—திருப்பெருந்துறை என்று எழுதிப் பின் திருவாவடுதுறைப் பதிப்பில் திருவாவடுதுறை என்று மாற்றிக் கொள்ளச் செய்தது.

திருவாசகத்துள் மாணிக்கவாசகர் திருவாவடுதுறையை எங்கும் குறிப்பிடவில்லே. அருகிலுள்ள திருவிடைமருதூரை ஐந்திடங்களில் குறிப்பிட்டிருக்கிருர்.

> இடை மருததனில் ஈண்ட இருந்து
> படிமப்பாதம் வைத்த பரிசும் (2.75—76).
> இடை மருதுறையும் எந்தாய் போற்றி (4—145)
> அந்த இடைமருதில் ஆனந்தத்தேன் இருந்த— (276).
> உத்தரமங்கக்-கோன் தங்கு இடை மருதுபாடி (328).
> இடைமருதே இடங்கொண்ட அம்மான் (552).

என்றெல்லாம் பாடியிருக்கிருர். ஆகவே அவர் அடுத்துள்ள திருவாவடுதுறையை இயல்பான பெயர் சொல்லத் தெரியாமல் இங்ஙனம் வேறு பெயராமல் குறிப்பிட்டாரென்று கருதுவது அறிவுக்குப் பொருத்தமாயில்லே.

இனி. கோகழி என்பது பெருந்துறையே என்று முடிவு செய்யும்போது இரண்டு பெயர்களும் கூறப்பட்

டுள்ள 'நண்ணிப் பெருந்துறையை' என்ற 630 ஆம் பாடல் இடர் தருவதால்தான் பெரும்பான்மையான ஆசிரியர்கள் கோகழி—திருவாவடுதுறை என்றே எழுதி விட்டார்கள். இது முதன் முதலில் வாசுதேவ முதலியார் உரைப்பதிப்பிலுள்ள குறிப்பு என்பதை மறக்கக் கூடாது. சுப்பிரமணிய பிள்ளை போன்றோர் 'பண்டாய நான்மறை' முதற் பாட்டில் கோகழி—பெருந்துறை என்று கூறி. ஆறும் பாட்டில் 'கோகழி—திருவாவடுதுறை' என்று கூறுவது விசித்திரமாகவுள்ளது. மா, வே. நெல்லையப்ப பிள்ளையவர்கள் தம்முடைய திருவாசக அருள்முறைத் திரட்டில் கோகழி ஆண்ட குருமணி என்ற இடம் மட்டுமே எடுத்திருக்கிறார். "கோ—பெரிய, கழி—துறை என்பது குரவர்களுக்கெல்லாம் சிறப்பான குரவன் என்பதைக் குறிக்கிறது." சிவ அருணகிரி முதலியாரும் திருப்பெருந்துறை என்று எழுதிவிட்டு, திருவாவடுதுறை என்று கூறுவாருமுளர் என்று குறிப்பிட்டுள்ளார்.

மாணிக்கவாசகர் முதல் முதலாகப் பாடத்தொடங்கியது சிவ புராணம். அது திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது என்பது வரலாறு. அதன் தொடக்கத்தில் வரும் மூன்று வரிகளை இங்கே மீண்டும் நாம் நினைவு கூற வேண்டும்.

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள்வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க.

சிவ புராணத்தின் தொடக்கம் மிக்க பொருள் பொதிந்தது. வேதம் நான்கினும் மெய்ப்பொருளாகிய மந்திரமான திருவைந்தெழுத்தோடு தொடங்குகின்றது. திருவைந்தெழுத்து திருவாசகத்துள் பல இடங்களில் போற்றப் பெற்றிருப்பதைக் காணலாம் முதன் முதலாக வரும் நமச்சிவாய என்ற தொடரை இறைவன் திருநாமமாகவும் கொள்வர், மந்திரமாகவும் கொள்வர். மந்திர வடிவமாகவுள்ள பெருமானை வாழ்த்திய பின் அவன் இமைப்பொழுதும் தமது நெஞ்சத்துள் நீங்காது நின்ற நிலைமையையும் வாழ்த்துகிறார். இப்படிப்பட்ட இறைவன் குருநாதனாக

புலன்களால் காணும்படி எழுந்தருளி வந்து கோகழியின் கண்ணே தம்மை ஆட்கொண்டருளினுன் என்று மூன்ருவதாக அந்தக் குருமணியை வாழ்த்துகிருர். திருவாசகம் முழுமையிலுமே முதன் முதலாக வருகின்ற இடப்பெயர் கோகழி. பெருந்துறையில் எழுந்தருளி வந்து தம்மை ஆண்டவன் பரம்பொருளாகிய சிவபெருமானே என்ற நினைவோடு மாணிக்கவாசகர் பாடுகிருர். கோகழி ஆண்ட என்ருல் ''பெல்லாரி ஜில்லாவிலுள்ள கோகழி என்ற ஊரிலே வேற்று மொழிக்குரியவராய் ஆட்சி செய்து கொண்டிருந்து அல்லது அங்கு ஒரு மடத்து அதிபராய் இருந்துவிட்டு வந்து இப்போது எனக்குக் குருநாதராக இருக்கிருர்'' என்று பொருள் செய்வது விபரீதவுரை. இறைவனே குருநாதனுக இங்கு எழுந்தருளி வந்தான் என்பதுதான் பொருத்தமான உரையே அன்றி, கோகழி நாட்டுக்குத் தலைவனுக இங்கு வந்தவனே கடவுள் என்பது உரையாகாது.

எல்லா வரலாறுகளும் மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் பெருந்துறையில் அருள் செய்தார் என்றே கூறுகின்றன. கோகழி ஆண்ட குருமணி என்ற இடத்தில் கோகழி என்பது பெருந்துறையைத்தான் குறிக்கிறது; வேறு பொருள் இதற்கு நாம் கூறினுல் இதுவரை நாம் அறிந்த மாணிக்கவாசகர் வரலாறு பொய்யாய்ப் போகும். அதைப் பொய்யாக்க நாய் தயாராய் இல்லை. அவ்வரலாற்றை வைத்தேதான் நாம் கோகழி என்ற சொல்லுக்குப் பொருள் செய்ய வேண்டியிருக்கிறது.

மேலும், சிவ புராணம் முழுமையிலும் வருகிற வேறு இடப்பெயர்கள் பின்வருவன: பெருந்துறை, தில்லை, தென்பாண்டி நாடு; பெருந்துறையை உடைமையால் தென்பாண்டி நாட்டைக் குறிபபிட்டார். தில்லை கோயில் ஆனமையால் தில்லைக் கூத்தைச் சிறப்பித்தார். தில்லைக் கூத்தப் பெருமானுடைய குஞ்சித்த சேவடியின் கீழ் ஆன்மகோடிகள் அமைதிபெற வேண்டும் என்பதே சைவ சமய முடிவல்லவா? சிவபுரம் என்ற குறிப்பு இரண்டிடங்களில் வருகிறது. இது கயிலாயம் என்ற பொருளுடையதாயும் இருக்கலாம்; அல்லது பெருந்துறைக்கே

சிவபுரம் என்றபெயர் வரலாறும் புராணமும் கூறுகின்றமையால், பெருந்துறை ஆகவும் ஆகலாம். இம்முறையில் ஆராயும்போதும், கோகழி பெருந்துறையாகுமேயன்றி, ஒருபோதும் திருவாவடுதுறையாகக் காரணமே இல்லை.

கோகழி என்ற சொல்லுக்கு மிக்க எளிதாயும் எல்லா இடங்களுக்கும் ஒப்பதாயும் பொருள் கொள்ளும் வழியொன்றுண்டு. பெருந்துறை என்பது ஊர் அல்லது தலம்; கோகழி என்பது கோயில்; இங்கு குருந்தின் கீழ்ப் பெருமான் எழுந்தருளி வந்த குருமூர்த்தமாகிய அவதாரம். பல சிவ தலங்களில் தலத்துக்கு ஒரு பெயரும் கோயிலுக்கு ஒரு பெயரும் அமைந்திருப்பதை நாம் அறிவோம். வெண்ணெய் நல்லூர்—அருட்டுறை; சாத்தமங்கை–அயவந்தி; கருவூர்–ஆநிலை. புள்ளமங்கை–ஆலந்துறை; திலதைப்பதி–மதிமுத்தம்; நறையூர்–சித்தீச்சுரம் போன்றன காண்க. இங்ஙனமே பெருந்துறைக்கும் நாம் கொள்வோமானால், அதாவது பெருந்துறை என்ற தலத்தில் இறைவன் திருவுருக்கொண்டு தோன்றிய குருந்தமர நிழல் (ஆகிய கோயில்) கோகழி என்று கொண்டால் திருவாசகத்தில் எந்த இடத்திலும் பொருள் காண்பதில் இடர்ப்பாடில்லை. கோகழியாண்ட குருமணி என்பதற்குப் பொருள் நேரே பெறுகிறோம். 'நண்ணிப் பெருந்துறையை' என்ற பாடலுக்கும் எளிதில் நேரான பொருள் கிடைக்கிறது.

"நெஞ்சே, நீ பெருந்துறையை அடைந்து அங்கு நம்மிடர்கள் போயகலும்படித் திருவுளங்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற கோகழி நாதனைக் காண்பாயாக. இவனே பண்ணை ஒத்த இனிய மொழியாளாகிய உமாதேவியோடு முன்பு நமக்காகத் திருவுத்தரகோச மங்கைத் திருக் கோயிலில் குருநாதனாக நீங்காது இருந்தான். "அதாவது," முன்பு அவ்வாறு நம் பொருட்டு உத்தரகோச மங்கையுள் இருந்தவன் இன்று பெருந்துறையில் வந்து நம்மை ஆட்கொள்ளும் பொருட்டுக் கோகழியில் எழுந்தருளியுள்ளவன்; அவனை நீ சென்று தரிசிப்பாயாக" என்பது பொருள். உத்தரகோச மங்கையிலுள்ளவனே நம் பொருட்டுப் பெருந்துறைக்கு வந்து ஆண்டுள்ள கோகழியில் காட்சி வழங்குகிறான் என்க.

உத்தரகோச மங்கையையும் பெருந்துறையையும் ஒரே பாடலில் சேர்த்துப் பாடப்பெற்றிருப்பதைத் திருவாசகத்துள் பல இடங்களிலும் காணலாம்.

அத்தி உரித்து் அது போர்த்தருளும் பெருந்துறையான்
பித்தவடிவு கொண்டு இவ் உலகில் பிள்ளையும்ஆய்
முத்திமுழுமுதல் உத்தரகோச மங்கைவள்ளல்
புத்தி புகுந்தவா—பூவல்லி கொய்யாமோ.

அது பழச்சுவை என அமுதென அறிதற்கு
அரிதுஎன எளிதுஎன அமரரும் அறியார்
இது அவன் திருவுரு இவன் அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்கு எழுந்தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தரகோச
மங்கை உள்ளாய், திருப்பெருந் துறைமன்னு,
எதுஎமைப் பணிகொள்ளும் ஆறு ? அதுகேட்போம்,
எம்பெருமான்! பள்ளி எழுந்தருளாயே.

பெருந்துறை—கோகழி என்ற இருபெயர்களும் வரும் பாடலுக்குப் பொருள் செய்வதில் எவ்வித இடர்ப்பாடுமில்லை. கோகழியாண்ட குருமணி, கோகழி மேவிய கோ, கோகழிநாதன், கோகழி எம்கோமான் என்ற பிற நான்கிடங்களிலும் பொருள் நேரே விளங்குகிறது. எனவே கோகழி என்பது கோயிற் பெயர் எனக் கொள்வதே சிறப்புடையது.

கோகழி திருவாவடுதுறையன்று. பெருந்துறையே என்றுணர்வதற்கு மறைமலையடிகள் உள்ளிட்டார் அனைவரும் மிக்க முயற்சி எடுக்கிறார்கள். "கோகழி—பெருந்துறை; கோ—தலைமை பெருமை; கழி—துறை; கோகழி என்பது பெருந்துறை என்று இங்ஙனம் பொருள் படுதலை அறியாதார் இதற்குத் திருவாவடுதுறை எனப் பொருளுரைப்பர், திருவாதவூரடிகளுக்கு இறைவன் குருவடிவிற் போந்து அருள் புரிந்தது திருப்பெருந்துறையிலேயாம் என்பதனை அடிகளே அருட்பத்தில்,

திருந்துவார் பொழில்சூழ் திருப் பெருந்துறையிற்
செழுமலர்க் குருந்த மேவியசீர்
இருந்தவா றெண்ணி ஏசறு நினைந்திட்டு
என்னுடை எம்பிரான் என்றென்று
அருந்தவா நினைந்தே ஆதரித் தழைத்தால்
அலைகட லதனுளே நின்று
பொருந்தவா கயிலை புகுநெறி இது காண்
போதராய் என்றரு ளாயே

என்று அருளிச் செய்தலானும், அடிகள் வரலாற்றினைக் கூறும் புராணங்களும் அங்ஙனமே உரைத்தலானும், திருவாவடுதுறையில் அதுபோற் 'குருவடிவிற் போந்து இறைவன் அவரை ஆண்டருளினன் என்பது யாண்டும் கூறப்படாமையானும், அங்ஙனம் பொருளுரைத்தல் பொருந்தாதென்க. தெய்வச் சிறப்பு வாய்ந்த தீர்த்தமாகக் கொண்டாடப்படும் ஒரு பொய்கை தன் கண் உளதாதல் பற்றியே அவ்விடம் பெருந்துறை என வழங்கப்படலா யிற்றென்பதற்கு,

திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறையிற்
செழுமலர்க் குருந்தம் மேவியசீர்—அருத்தனே

என்று அடிகள் அருளுமாற்றால் இனிது விளங்கலானும், இக்காரணம் கோகழி என்னும் பெயரானும் எளிதிற் புலப்படுதலானும், இதற்கு இவ்வாறு பொருளுரைத்தலே பொருத்தமாமென்று துணிக" என்று அவர் எழுதியிருப் பதைக் காண்க. அவர் திருவாசகம் முதல் நான்கு பகுதி களுக்கு மட்டும் உரை எழுதியமையால் பின்னல் 'பண் டைய நான்மறை' ஐந்தாம் பாட்டில் பெருந்துறை—கோகழி இரண்டையும் சேர்த்துப் பொருளுரைக்கும் சிக்கல் இல்லாமல் போயிற்று.

பெருந்துறை என்பதினும் பெருந்துறைக் கோயில் என்று கொள்வது சகல சிக்கல்களையும் எடுத்து விடு கிறது. கா. சுப்பிரமணிய பிள்ளை கூறுகிறபடி பசுத் தன்மை கழிதல் என்ற பொருளும் கோயில் என்ற கருத் துக்கு எளிதாய்ப் பொருந்துகிறது. பெருந்துறையில் வாதவூருடைய பசுத்தன்மையைக் கழித்த இடம் கோகழி எனப்படுகிறது என்றால் கருத்து நேரிதாகிறது.

இதுவரை யாருமே இவ்வாறு பெருந்துறை தலமென்றும் கோகழி கோயில் என்றும் கொள்ளவில்லையே என்பது இப்போது இவ்வாறு கொள்வதற்குத் தடையாகிவிடாது. வேறுவகை ஆட்சேபங்களும் சொல்லக்கூடும். குருந்தின்கீழ் பெருமான் எழுந்தருளி வந்தாரேயன்றி அங்குக் கோயில் இருக்கவில்லையே? கோகழி என்பது எப்படிக் கோயிலாகும்? என்பது ஒரு தடை. இராமன் இருக்குமிடம் அயோத்தி என்று பேச்சு வழக்கில் சொல்வதுபோல, இறைவனுடைய உருவெளிப்பாடு ஏற்படும் இடம் எல்லாம் கோயிலே—குருந்தின்கீழ் அன்று இருந்த கொள்கையை மாணிக்கவாசகர் கண்டார். அவ்விடமே கோயிலாயிற்று. அப்போது அங்குக் கோயில் இல்லை என்பது கருத்தன்று. பெருமான் எழுந்தருளிய இடம் கோயில். அதற்குக் கோகழி என்று அவர் பெயர் கொடுத்துப் பாடினார். பாடிய பெருமையாலேதான் கோயில் மிக்க சிறப்போடு பிற்காலத்தில் உண்டாயிற்று.

நன்கு ஆராயின், தமிழ் நாட்டுத் தலங்கள் அனைத்திலும் கோயில் என்பது என்ன? ஒரு மரத்தடியில் தோன்றிய சிவலிங்க உருவேயல்லவா அனைத்துப் பெருமைக்கும் மூலம்? அதுபோலக் குருந்தின்கீழ் இருந்தவரே மூர்த்தி; அவ்விடமே கோயில் என்பது மரபுக்கு ஒத்ததே. எனவே, மாணிக்கவாசகரைச் சிவபெருமான் ஆட்கொள்ள எழுந்தருளி வந்த ஊர் பெருந்துறை என்றும், குருந்தின்கீழ் அமர்ந்த இடம் கோகழி என்றும் முடிவு செய்கிறோம். இம்முடிவு, திருவாசகத்துள் கோகழி என்ற சொல் பயிலும் ஐந்திடங்களுக்கும் பொருந்துவதாயுள்ளது.

இனி, பெருந்துறை என்ற தலப்பெயருக்குப் புராணக்காரர்கள் கூறும் பொருளைச் சொல்லி இக்கட்டுரையை முடிக்கலாம்.

சுந்தரலிங்க முனிவர் பாடிய திருபெருந்துறைப் புராணமும் சாமிநாதர் பாடிய ஆதி கயிலாய மான்மியம் என்ற பெயருடைய திருப்பெருந்துறைப் புராணமும் அச்

சாகவில்லை. மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய திருப்பெருந்துறைப் புராணம் 1892 இல் டாக்டர் சாமிநாதையரவர்களால் அச்சிடப் பெற்றது. இது 1656 பாடல்களுடையது. இதிலுள்ள பெருந்துறைப் படலம் என்ற படலத்தின் 79 ஆம் பாடல் பெருந்துறை என்ற பெயர் வந்த காரணம் கூறுகிறது. குருந்தின்கீழ் உள்ளார், ஒரு மறையவராகி வந்து இருபனையளவு ஆழம் அகழ்ந்தாலும் நீர் ஊறாத இந்த நிலத்தில் ஒரு வெட்டு வெட்டியவுடனே குமிழியெடுத்து நீர் பெருகியமையால் இவ்விடம் பெருந்துறையாயிற்றென்பது இங்குள்ள வரலாறு. மறைமலையடிகள் குறிப்பிடும் பொய்கைக்கு இவ்வரலாறு துணை செய்யும். திருப்பெருந்துறைப் பிரதேசம் நீரில்லாத இடம். அங்குப் பொய்கை இருந்தால் அதைச் சிறப்பித்துக் கூறுதல் நியாயம்.

ஆனால் திருவாதவூர் புராணமுடையார் கூறும் கருத்துச் சிறப்பாயுள்ளது.

வெம்பிறவி வேலைதனில் வீழ்பவர்க ளெல்லாம்
நம்புசிவ நாமமெனும் நற்புணை பிடித்தால்
எம்பரன் அருட்கரையில் ஏறுதுறையா மால்
அம்புவி மொழிந்துள பெருந்துறை அதன்பேர்.

கோகழி என்ற சொல் திருவாசகத்தன்றி வேறு எந்த நூலிலும் எப்பொருள்பற்றியும் வழக்கில் இல்லை என்பது வியப்பாயுள்ளது. எனினும் தத்துவ ரத்தினாகரம் என்ற ஒரு சாத்திர நூல் செய்த ஆசிரியர் கோகழி அடிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளமை இங்கு நினைவுகூரத்தக்கது. ஆனால் இந்நூல் காலத்தால் மிகவும் பிற்பட்டது.

பெருந்துறை ஊர் என்றும் கோகழி அவ்வூரிலுள்ள கோயிலென்றும் இதுவரையில் விளக்கிக் கூறினோம். சைவ உலகம் நன்கு சிந்தித்து இக்கருத்தை ஏற்பதாக.

—✶—

செய்யுட் கோயில்

(வித்துவான் க. வா. சச்சிதானந்தம்)

உலகத்திலுள்ள எல்லா மொழியாளர்களும் தம்தம் மொழியையே சிறப்புடை மொழியாகக் கூறுவர். கூறினும் தமிழர் தம் மொழியைக் கருதியதுபோல் யாரும் கருதவில்லை என்றே சொல்லலாம், எங்கெங்கு இனிமையைக் கண்டார்களோ, அங்கங்குத் தம் மொழியாகிய தமிழ் இருப்பதைக் கண்டார்கள். தென்றலைத் தமிழ்த் தென்றல் என்றார்கள். ஒரு பெண்ணின் இனிய சாயலைப் பார்த்துத் "தமிழ் தழீஇய சாயல்" என்றார்கள். இன்பத்தையளிப்பவனான இறைவனைத் "தமிழன் கண்டாய்" என்றார்கள். தமிழையும் இறைவனையும் தொடர்புபடுத்திப் பாடியவர்களுள் சிறந்தவர்கள் குமரகுருபரரும் சிவப்பிரகாசருமே யாவர்.

இறைவனின் அர்த்த நாரீஸ்வர வடிவத்துக்கு "ஒருவர்" என்ற தமிழ்ச் சொல்லே பொருத்தமானது என்றும் அவ்வடிவத்தை அழைக்க 'எந்தாய்' என்ற தமிழ்ச் சொல்லே ஏற்றது என்றும் வியந்த பெருமை குமரகுருபரருடையதேயாம். 'இறைவனே' நின்பால் பிறவாமையை வேண்டுவார் வேண்டுக. மதுகரம் பெருகுறு தமிழ்ச் சொல் மலர் நினக்கணியும் பிறவியே வேண்டுவன் நான்" என்று கூறிய பெருமை சிவப்பிரகாசருடையதாம்.

இவ்வாறு தமிழை இயற்கையிலும் இறைவனிடத்திலும் கண்டவர்கள் தமிழர்கள். இறைவனை "ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே" என்றார் அப்பரடிகள். சுந்தரரோ 'ஓசை ஒலிகளாற் பிறக்கும் எழுத்துக்களாகவும், எழுத்துக்களாற் பிறக்கும் சொற்களாகவும் சொற்களிடமாகப் பிறக்கும் பொருளாகவும் இறைவன் இருக்கிறான்" என்றார். 'எழுத்துச் சொற் பொருள் ஆனான்' என்றார் அவர். இதிலிருந்து 'எழுத்தாலான சொற்களைக் கொண்டு பொருளுக்கு இடமாக அணிபெறச் செய்யப்படும் செய்யுளாகவும் ஆனவன்' இறைவன் என்று உணரலாம். இவ்வுணர்வு

இறையருள் கைவரப் பெற்றவர்க்கே வரும். இறையருள் கைவரப் பெற்றவர்களுள் ஒருவர் துறைமங்கலம் சிவப்பிர காச சுவாமிகளாவர். அவர் தம் முன்னோர் செய்யுட்களைப் பார்த்தார். அவற்றில் சிவபெருமான் இருப்பதைக் கண் டார். செய்யுளை ஒரு கோயிலாகக் கருதிவிட்டார்.

"............மல்லலுறச்
சந்தி பொருத்தித் தகும்சீர் கெடாதடுக்கிப்
புந்தி மகிழ்அற் புதவணித்தா — முந்தையோர்
செய்யுள்போற் செய்த திருக்கோயி லுள்ளிருந்தெம்
பையுள்போக் கிற்கும் பரஞ்சோதி

(திருவெங்கையுலா. 66–68)

என்று திருவெங்கையுலாவில் கூறினர். செய்யுளைக் கோயிலாகக் கூறியவர் எவருமில்லை. அப் பெருமை சிவப்பிரகாசரையே சாரும். செய்யுளில் இரண்டு சொற் சேருமிடத்தில் சந்தி எழுத்துப் பொருத்தப்பட்டிருக்கும். அவ்வச் செய்யுளுக்கு ஏற்ற சொற்சீர்கள் தளை கெடாதபடி அடுக்கப்பட்டிருக்கும். படிக்கும்போது மனம் மகிழும்படி அலங்காரம் கொண்டிருக்கும். செய்யுள் போலவே கோயி லும் கற்களின் இடைவெளி சுண்ணச் சேற்றால் பொருத் தப்பட்டிருக்கும். வரிசை கெடாமல் கற்கள் அடுக்கப்பட் டிருக்கும். வெளியிருந்தும் உள்ளிருந்தும் பார்ப்பதற்கு மகிழும்படியான அழகுடையதாயிருக்கும். இவ்வகையில் கோயிலானது செய்யுள் போல் இருக்கின்றது. சிவப்பிர காசர் கல்லாற் கட்டப்பட்ட கட்டடங்களைக் கண்டவர். தாமே பல விடங்களிற் கட்டடங்களின் சிறப்புக்களைக் கூறி யிருப்பவர். அங்கெல்லாம் செய்யுள் போற்செய்த கட்ட டங்கள் என்று சொல்லவில்லை. சொல்வதால் தவறும் இல்லை அப்படி யிருக்கக் கோயிலை மட்டும் "செய்யுள் போற் செய்த திருக் கோயில்" என்றார். அரசன் மனையும் கோயில் எனப்படும். படவே அரசன் கோயிலையும் அப் படிப் பாடவில்லை. ஏன்? அவர் செய்யுளிற் கடவுளைக் காண விரும்பியவர். அதனால் செய்யுள் என்றால் கடவுளைப் பொருளாகக் கொண்டிருக்க வேண்டும் என்று ஆராய்பவர்.

அதனாலன்றோ "தமது வாசகத்துக்குப் பொருள் தில்லை நடராசப் பெருமானே" என்று குறித்த மாணிக்கவாசகரைப் பார்த்து "பாவெனப் படுவது உன் பாட்டே" என்றார்.!

கற்றதனாலாய பயன் வாலறிவன் நற்றாள் தொழுதலே என்று வள்ளுவர் விளக்கினாரென்றால் கற்கப்படும் செய்யுட்கள் இறைவனைப் பொருளாகக் கொண்டிருக்க வேண்டும் என்று கொள்வதில் தவறில்லையே! இப்படிக் கொண்டமையால்தான் செய்யுளை வெறுங் கட்டடத்துக்கு உவமையாக்காமல் திருக் கோயிலுக்கு உவமையாக்கினர்.

திருக் கோயிலின் உள்ளிருப்பவர் சிவபிரான். அவர் பிறவித் துன்பத்தைப் போக்குபவர். செய்யுளின் உள்ளிருப்பது பொருள். அப்பொருள் துன்பத்தைப் போக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். சிவப்பிரகாசர் கண்ட முந்தையோர் செய்யுட்கள் அப்படிப் பட்டனவே. அச் செய்யுட்களின் பொருள்கள் பிறவித் துன்பத்தைப் போக்குவனவாகக் கண்டார். அதனால் உவமை கூறினர்.

கோயிலைக் கடவுளின் பருத்த உடல் (தூல சரீரம்) என்பர். உள்ளிருக்கும் வடிவை நுண் உடல் (சூக்கும சரீரம்) என்பர். புறம்பேயிருந்து கோயிலை வணங்குகிறோம். உள்ளே சென்று கடவுளை வணங்குகிறோம். செய்யுளும் பார்த்த அளவில்—படித்த அளவில், பொருள் விளங்காவிட்டாலும் மதிக்கப்பட வேண்டியதாம். அதனால்தான் சிறுவயதில் பிள்ளைகளைப் பொருள் சொல்லிக் கொடுப்பதற்கு முன்னமே மூல பாடங்களைப் பற்றுதலோடு மனப்பாடம் செய்யச் சொல்லுகிறோம். கோயிலை வணங்கிப் பின் உள்ளிருக்கும் கடவுளை வணங்குதல் போலச் செய்யுட்களை முன் நன்கு படிக்கச் செய்து பின் பொருள் சொல்லுகிறோம். பொருள் தெரியாமலே செய்யுளைப் பன்முறைப் படிப்பதாலும் சிறிது பொருள் விளங்கிவரும். அதனாற் பயனும் உண்டு. அதனாலன்றோ பத்திப் பாடல்களைப் பொருள் தெரியாவிட்டாலும் இறைவன் முன்னிலையில்

பாடும் பழக்கமும் வழக்கமும் வந்தன. அவ்வாறு பாடிப் பயனும் பெறுகின்றனர். பெறவே செய்யுளைக் கோயி லுக்கு உவமையாக்குதல் முற்றும் பொருந்துமாறு அறிக.

திருக்கோயில் தூய்மையானது—அசுத்தம் செய்யப் படாமல் காக்கப்பட வேண்டியது. செய்யுளும் தூய்மை யானது. மிதிக்கப்படாதது. புத்தகத்தில் கால் பட்டால் தொட்டுக் கும்பிடும் பழக்கம் இன்றும் உண்டு. அது இது பற்றி வந்ததேயாம். புத்தகத்தைக் கீழே வைப்பதையும், எறிவதையும் கண்டால் பெரியோர்கள் அவ்வாறு செய்யா மல் தடுப்பதும் அதை மதிக்க வேண்டும் என்ற கருத்திலே யாம்.

திருக்கோயில் யாவர்க்கும் பொது; எல்லாருக்கும் இடமளிப்பது. முந்தையோர் செய்யுளும் யாவர்க்கும் பொது. யாவராலும் படிக்கப்படுவது. கோயில் உள் பொருளாம் கடவுளும் பொது; செய்யுட்பொருளாம் இன்ப மும் பொது. ஆனல், இன்பம் தருவது எக்கட்டமும் பொது ஆகா; அதன் உள்ளிருப்போரும் அப்படியில்லை.

திருக்கோயிலைக் கட்டுபவன் கூலியை மட்டும் நோக்க மாகக் கொள்ளாமல் கடவுளை மனத்திற்கொண்டு பயபக்தி யுடன் கட்டுவான். கட்டிடம் கட்டுபவன் கூலியையே முக்கியமாகக் கொள்வான். முந்தையோரும் உள்ளுறை யும் பொருளையே முக்கியமாகக் கொண்டு செய்யுள் செய்தனர்.

செய்யவே ஒரு செய்யுள் தன் உள்ளிருக்கும் பொரு ளால் படிப்பவனின் துன்பத்தைப் போக்கும்படியிருத்தல் வேண்டும் என்று கருதியும், அவ்வாறு முந்தையோர் செய் யுட்கள் அமைந்திருந்தமை கண்டும் செய்யுளைக் கோயிலுக்கு உவமை கூறினர் சிவப்பிரகாசர். அதனல்தான் "செய்யுள் போற் செய்த திருக்கோயிலுள்ளிருந்து எம் பையுள் போக் கிற்கும் பரஞ்சோதி" என்றார் அவர். நாமும் செய்யுளைக் கோயிலாகவும் பொருளைக் கடவுளாகவும் கொண்டு வழி பட்டு இன்புறவோமாக.

தென்னிந்தியக் கல்வெட்டுகள் தொகுப்பு

(தி. கி. நாராயணசாமி நாயுடு)

2. திருச்சி மாவட்டம்

1. லால்குடி வட்டம்

ஆடிகுடி 20/104–107
ஆலம்பாக்கம் 09/704–733
அன்பில் (கீழ்) 02/588–601 ; 38/149–155
ஆங்கரை 31/249
ஆவாரவல்லி 08/606
பிட்சாண்டார் கோயில் 02/602 ; 37/163, 164;
எடுமலை 26/279, 280
கண்ணனூர் 1891/33 ; 05/509–511; 37/161, [162
லால்குடி 1892/84–89 ; 29/98–142 ; 31/250
மணச்சநல்லூர் 09/663
மும்முடிசோழமங்கலம் 29/143
நத்தமான்குடி 29/145–156
பாலையூர் 26/278
பெரியகுறுக்கை 26/265–[277
சமயபுரம் 09/746–748; 30/241, 242; 37/158–[160
செங்கந்தி 28/325–330
சென்னிவாய்க்கால் 29/144
திருமங்கலம் 30/243–255
திருநெடுங்குளம் (மணச்சநல்லூர்) 09/664–697
திருப்பைஞ்ஞீலி 1892/90–[94
திருப்பட்டூர் 08/48–50; & 587–605
திருவெள்ளரை 05/512–543; 10/81–91
திருவாசி 1891/34
துடையூர் (திருவாசி சமீபம்) 38/150–161
துறையூர் 09/698–703
ஊட்டத்தூர் 12/459–531

2. திருச்சிராப்பள்ளி வட்டம்

அல்லூர் 03/365–385
அந்தநல்லூர் 03/349–364
திருவானைக்கா 1891/18–32
03/61–67
05/499–508
08/480–487
10/92
37/103–136
38/1–79
குமாரவயலூர் 37/138–157
மேலூர் 24/404–413
பாலூர் 18/346–359
பேட்டைவாய்த்தலை [1890/71–72
புத்தூர் 14/143
திருஅரங்கம் 1891/45, 46; 1918/341–345; 92/51–74; 1930/256–[269; 38/80–129; 37/1–102
திருச்செந்துறை 03/291–[327; 38/143–148
திருப்பராய்த்துறை 03/244–290; 08/562–586; 07/169–180
திருஎறும்பூர் 1892/100, 101; 14/96–142

3. பெரம்பலூர் வட்டம்

4. உடையார்பாளையம் வட்டம்

5. கரூர் வட்டம்

6. குளித்தலை வட்டம்

7. முசிரி வட்டம்

3. கோவை மாவட்டம்

1. அவிநாசி வட்டம்

2. ஈரோடு வட்டம்

3. உடுமலைப்பேட்டை வட்டம்

4. கொள்ளேகால் வட்டம்

5. கோபி வட்டம்

6. கோயம்புத்தூர் வட்டம்

இடிகரை 23/5—36
மருதமலை 36/105
பேரூர் 93/547—570
சிங்கநல்லூர் 10/18—20
வெள்ளலூர் 10/141—149
விண்ணப்பள்ளி 36/106— [108

7. தாராபுரம் வட்டம்

அகிலாண்டபுரம் (காங்கேயம்) 20/241—246
அலங்கியம் 20/159—164
அரசன்பாளையம் 20/256— [272
அராத்தொழுவு 20/282— [288
போலுமான்பட்டி 10/150— [157
தளவாய்பட்டினம் 20/158
தாராபுரம் 50/143—154
காடையூர் 20/289, 290
கண்ணபுரம் 20/218—224
காட்டாங்காணி 20/273— [280
கீரனூர் 20/247—255
கொளிஞ்சிவாடி 1893/580—585; 20/155—157
கோனபுரம் 20/137—142
கொங்கூர் 20/165—175
கோட்டனூர் 20/176, 177
குண்டடம் 20/117—134
கொடுவாய் (மதுரா) 20/108 [—115
குறுக்குபாளையம் 20/116
லக்கமணநாய்க்கன்பட்டி 20/210
மடவிளாகம் 20/225—229
மண்டபுரம் (மேட்டுப்பாளையம் மதுரா) 20/217
மறவபாளையம் 20/178–181
மருதுறை 20/240
மயில்ரங்கம் 20/213, 214
மூலனூர் 20/215
முட்டூர் 10/158—166
நஞ்சைத்தலையூர் 20/212
நட்டக்கடையூர் 20/230— [239
பரஞ்சேர்வள்ளி 08/556— [560
பிரமியம் 20/182—209
சடையம்பாளையம் 20/135, [136
தூரம்பாடி 20/211
வெள்ளியாரசல் 05/619— [621
வட்டமாலை 20/281
வெள்ளக்கோயில் 20/216

8. பவானி வட்டம்

ஆண்டியூர் 28/227—229
காவேரிபுரம் 27/188—195

9. பொள்ளாச்சி வட்டம்

ஆனைமலை 28/227—229
பெரியகளந்தை 27/164— [177
பொள்ளாச்சி 27/185; 29/441—443
சாமத்தூர் 27/184

10. பல்லடம் வட்டம்

பட்டணம் 09/210
புத்தெரிச்சியல் 29/439— [440
செஞ்சேரி 27/178—183

சைவ சமயிகளுக்கு இலக்கணமான பதினாறு பேறுகள்

சைவ சமயிகளுக்கு அடையாளமான பதினாறு இலக்கணங்கள் கீழ்த்தந்துள்ள பாட்டுகளில் குறிக்கப்பட்டுள்ளன. அவை திருநெல்வேலி சைவ சமயர் குழாமால் தொகுக்கப்பட்டு "சைவம்" பத்திரிகையில் (மலர் 4 இதழ் 9 செப்டம்பர் 1918) அச்சிடப்பட்டன. அவை மிகப் பொருத்தமாய் இருப்பதால் இங்கு தரப்படுகின்றன :—

மறைகள் நிந்தனை சைவ நிந்தனைபொ ருமனம்
தறுகண் ஐம்புலன்கட்கேவல் செய்யுருச் சதுரு
பிறவி தீதெனுப் பேதையர் தமமொடு பிணக்கும்
உறுதி நல்லறம் செய்பவர் தங்களோ டுறவும் (1)

யாதுநல் லன்பர் கேட்கினும் உதவுறும் இயல்பும்
மாத வத்தினோர் ஒறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுப தேசம் மெய் யுறிதியும், அன்பர்
தீது செய்யினும் சிவச்செய லெனக்கொளும் தெளிவும் (2)

மனமும் வாக்கும்நின் னன்பர்பால் ஒருப்படு செயலும்
கனவி லும்உன தடியருக்கு அன்பராம் கருத்தும்
புனித நின்புகழ் நாள்தொறும் உரைத்திடும் பொலிவும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும் (3)

தீமை யாம்புறச் சமயங்கள் ஒழித்திடு திறனும்
வாய்மை யாகவே பிறர்பொருள் விழைவுரு வளனும்
ஏமு றும்பர தாரம்நச் சிடாதநன் னோன்பும்
தூய்மை நெஞ்சில்யா னெனசெனும் செறுக்குருத்
துறவும் (4)

துறக்கமீ துறைகினும் நரகில் தோய்கினும்
இறக்கினும் பிறக்கினும் இன்பம் துய்க்கினும்
பிறைக்கொழுந் தணிசடைப் பெரும இவ்வரம்
மறுத்திடா தெனக்குநீ வழங்கல் வேண்டுமால் (5)

இந்தப் பதினாறையும் பெற்றால் பெருவாழ்வு அடையலாமெனப் பெரியோர் கருதுவர். சைவர்களின் அகப்புற இலக்கணங்களை இப்பாட்டுகள் தெரிவிப்பதால், அவைகளைப் பிரார்த்தனைக் கூட்டங்களிலும், தனிப்பட்ட முறையிலும் ஓதலாம்.

—நல். மு.

சித்தாந்த சூத்திர விருத்தி

இந்நூல் சென்னை அரசாங்கக் கீழ்நாட்டுக் கலைச்சுவடி நூல் நிலயத்தாரால் தமது சஞ்சிகை Vol. XVI No. 1ல் (1963ம் ஆண்டு) முதல் முதலாக அச்சிடப்பட்டுள்ளது. இதை இயற்றியவர் மணிகர்ணிகா மடத்தலைவரான விச்வேஸ்வர சிவசாரியாரின் சீடர், சதாசிவ சிவாசாரிய யோகியாவர். இவ்விருத்தி வடமொழி சிவஞான போத சூத்திரங்கட்கு வியாக்கியானமாக அமைந்துள்ளது. எளிய வடமொழி நடையில் எழுதப்பட்டுப் பல சிறந்த (பவுஷ்கரம், மிருகேந்திரம் முதலிய) மேற்கோள்களைக் கொண்டுள்ளது. இது முன்னொருமுறை கும்பகோணம் சாரதா விலாசம் பதிப்பாகிய ஸ்ரீ சிவாக்கிரயோகிகள் பாஷ்யத்துடன் சேர்த்து அச்சிடப்பட்டதாகத் தெரிகிறது. இப்போது வெளியாயுள்ளது காகிதத்தில் தெலுங்கு லிபியில் எழுதப்பட்டிருந்த பிரதியைச் சீர்திருத்தி அச்சிடப்பட்டுள்ளது. பாயிரத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. "நிகமாகமம் பாராவாராபாரிண வைதிக சைவ சித்தாந்த ஸ்தாபனாசாரிய வாமதேவருஷி சம்பிரதாய பிரவர்த்தக மணிகர்ணிகா மடநிவாச பிரசித்த நைஷ்டிக வர்ய விஸ்வேஸ்வர சிவாசார்ய பிரதான சிஷ்ய சைவ சன்னியா நிஷ்டா நிஷ்ணாத சதாசிவசிவாசாரிய யோகி தானி சித்தாந்த சூத்ராணி வ்யாகரோதி." சிவன், விக்கினேசுவரர், அம்பிகை ஆகிய தெய்வங்கட்கும் தமது குருவான விசுவேசருக்கும் வணக்கம் செலுத்து முகத்தால் நூல் தொடங்குகிறது.

ஸ்கந்த பரம்பரையில் வாமதேவர், நீலகண்ட சிவாசாரியர், விசுவேசுவரர், சதாசிவசிவாசாரியர் என்று ஆசார்ய பரம்பரை காணப்படுகிறது. 16-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சிவாக்ரயோகிக்கு ஒரு நூற்றாண்டு காலத்திற்குள் இந்நூலாசிரியர் முற்பட்டவராய் இருந்திருக்க வேண்டும். ஆசிரியர் வைதிக சைவ சித்தாந்த நெறியைப் பின்பற்றுபவர். பௌஷ்கரம், மிருகேந்திரம், அஜிதம் முதலானவற்றினின்றும் மேற்கோள் காட்டியும் அனுமானத்தின் மூலமும் உலக கருத்தா பரமேசுவரன் என்பதை நிலைநாட்டுகிறார். தேவிகாலோத்தரம், அசிந்த்யம், வாதுளம் முதலானவற்றை எடுத்துக்காட்டி சிவபரம்

பொருளுக்கு இலக்கணம் கூறுகிறார். இல்லறத்தான் வருணாசிரம தர்ம சமயாசாரங்களைக் கடவாது வேத சிவாகமங்களில் கூறப்பட்டுள்ள நித்திய நைமித்திக கர்மாக்களைச் செய்வானாக என்று கூறுகிறார். வேதாந்தமும் சித்தாந்தமும் முரண்பட்டவை அல்ல என்ற கருத்தை உடையவர் ஆசிரியர். "சிவனே நான்" என்ற அத்வைத பாவனை ஏற்பட வேண்டும் என்று உபதேசிக்கிறார். பதினோராம் சூத்திரத்தில் வரும் 'பக்தி' என்ற சொல்லை விளக்கும் வகையில் சரியை, கிரியை, யோகம் என்ற நிலைகளை சிவதர்மோத்தரம், கூர்மம். தேவிகாலோத்தரம், பிரம்மகீதை, சித்தாந்தபோதம் முதலானவற்றினின்றும் மேற்கோள் காட்டியிருக்கிறார்.

இந்நூல் 56 பக்கங்கள் கொண்டது. இது மேலும் ஆராய்ச்சிக்குரியது.

— நல். மு.

மதிப்புரை

மத மாற்றத்தைத் தடுத்து நிறுத்துங்கள்

தமிழ்நாடு இந்து மிஷன், சேலம், வீரசவர்க்கார் அவர்கள் 83ஆவது பிறந்த நாள் குறித்து அவர்களுக்கு அன்புக் காணிக்கையாகச் சமர்ப்பித்த "மத மாற்றத்தைத் தடுத்து நிறுத்துங்கள்" என்னும் இலவசப் பிரசுரம் வரப்பெற்றோம்.

இவ்வெளியீட்டில் சிறப்பாகக் கிறித்தவர்களும் பொதுவாகப் பிற சமயத்தவர்களும் நம் சமயத்தினரைத் தங்கள் சமயத்திற்கு வலை வீசி எம்முறையில் சேர்க்கின்றனர் என்பதனை மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. புள்ளி விவரங்களுடன் எவ்வளவு பேர் பிற மதங்கள் சென்றனர் என்ற விளக்கமும் காணப்படுகிறது. இந்து மக்கள் எவ்வளவோ பேரை ஆங்கிலேயர் ஆண்டபோது மண், பெண், பொன் என்ற மூவாசைகளைக் காட்டி, அவைகளைக் கொடுத்துத் தங்கள் மதத்தில் ஈர்த்தனர்.

தற்போதும் பெண், மருத்துவம், கல்வி, அனுதைகள் விடுதி முதலிய பொறிகளை வைத்துக்கொண்டு நம்மவர் பலரைத் தங்கள் மதங்களின்பால் பிற மதத்தினர் ஈர்த்து விடுகின்றனர். நம் மக்கள் ஏமாளிகளாய்ப் பிற மதங்களுக்குச் சென்று விடுகின்றனர். அதற்கேற்ருற்போல் பிற மதத்தினர் எவ்வளவு சுறுசுறுப்புடன் தங்கள் மதத்தைப் பரப்ப முயற்சிகளை மேற்கொள்கின்றனர் என்ற விளக்கங்கள் பல இவ்வெளியீட்டில் உள்ளன. வேண்டுவோர் தமிழ்நாடு இந்து மிஷன், 162 B, முதல் அக்ரஹாரம், சேலம்-1 என்ற முகவரிக்கு எழுதி இவ்வெளியீட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

இவ்வெளியீட்டைப் பார்க்கும்போது உண்மைச் சமயப் பற்றுள்ள—பொதுவாக ஒவ்வொரு இந்துவும்—சிறப்பாகச் சைவர்களும் வருந்தாமலிருக்க முடியாது. வருந்திஞல் மட்டும் போதுமா? செயலில் இறங்க வேண்டாவா? பிற சமயத்திற்குச் சாராவண்ணம் அச்சமயம் போக விரும்புகிறவர்களுக்கு அம்மதத்தினர் காட்டும் நற்சூழ்நிலைகளை நாம் உருவாக்கிக் கொடுக்க வேண்டாவா? அவ்வாறு கொடுக்கவில்லையே !

உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி ஐந்தாறு குழந்தைகளுடன் ஒரு ஏழை அல்லற்படுகின்ருன். ஒரு பாதிரியார் கண்ணுகிய பொறிக்கு அக்குடும்பத்தினர்பட்டால் போதும்; உடனே பக்கலில் சென்று எல்லாவற்றையும் தெரிந்து கொள்கிருர். அவன்கூடச் சேர்ந்து இவரும் பல சொட்டுகள் கண்துளி விடுகின்ருர். "தேவரே இக்குடும்பத்தினரை இரட்சிக்கக்கூடாதா?" என்று அவ்வேழைக்காக இவர் பெருமானிடம் முறையிடுகின்ருர். உடனே "அப்பா! நீ கிறித்தவ சமயத்தில் வந்துவிட்டால் உன் துன்பங்கள் எல்லாம் பஞ்செனப் பறந்து போம். உன் குழந்தைகள் எல்லாவற்றையும் நான் படிக்க வைத்து வேலைகள் வாங்கிக் கொடுத்து விடுகின்றேன். நீ எப்படியாவது பிழைத்துக்கொள். இல்லையேல் உனக்கு வேண்டுமாயினும் சிறிய வேலை ஒன்று தருகிறேன்" என்று சாமர்த்தியமாகக்கூறி அவனை ஈர்க்கிருர். இதுபோன்று ஆறுதல் கூறி, கண்ணீர் விட்டு, பாரத்தையும் ஏற்றுக்கொள்

ளத்தக்க சூழ்நிலை வரும்போது யாராவது மனம் மாரும லிருக்க முடியுமா? சமயப்பற்று பஞ்செனப் பறந்துபோய் விடுகிறது. உடனே சிலுவை அவன் கழுத்தில் மாட்டப் படுகிறது. ஆறுமுகம் அந்தோணிசாமி ஆகிருன். குடும் பத்தினர் யாவரும் கூட்டத்தோடு அச்சமயத்துக்கு மாற் றப்படுகிருர்கள். அக்குடும்பத்தினர் மூலம் பலர் அங்கு பின்னர்ச் செல்லவும் வாய்ப்புண்டு. அக்குடும்பத்துப் பெண் குழந்தைகளைக் காட்டியும் தங்கள் மதத்திற்கு நம் சமயக் காளைகள் பலரை ஈர்த்து விடுகின்றனர். காத லுக்குக் கண்ணில்லையாதலின் இளங்காளையர் சமயப்பற் றின்றி—என் உற்ருர் உறவினர் முதலிய யாவரையும் உதறித் தள்ளிக்கூட—அந்தோ! பலர் பரசமயப்படுகுழியி லாழ்ந்து விடுகின்றனர். கல்விக்காகச் சென்றவர் எத் துணையோ பேர்!

மருத்துவ மனைகளில் மருத்துவ வசதிபெற உள்ளே செல்லும்போது அழகிரிசாமியாய்ப் போவார். இரண்டு மாதங்கள் தங்கி, மருத்துவம் பார்ப்பார். அவர்கள் அவரை நன்கு கண்காணித்துக் குணப்படுத்துவர். தினந் தோறும் "தேவர் உம்மை இரட்சிப்பார்." "தேவரே! இவரை இரட்சிப்பீராக" என்ற வாசகங்களை அவர் முன் னர் மண்டியிட்டுக் கொண்டே கூறுவர். தேவனை வேண்டு வர். அந்நோயாளி நமக்காகக் கடவுளிடம் இவ்வளவு பரிவாக வேண்டுகிருர்களே என்று பரிதாபமுறுவான். கடைசியில் மருத்துவமனையை விட்டு வெளியேறும்போது அவனை அடைக்கலசாமியாக்கி அனுப்பி விடுவார்கள். எனக்குத் தெரிந்து அம்மம்ம! எத்தனையோ பேர்கள் இவ்வாறு சிக்குண்ணக் கண்டிருக்கின்றேன். இவற்றிற் கெல்லாம் யாரை நோவது? ஈர்ப்பவரை நோவதா? சேர் பவரை நோவதா? அவர்கள்போல் ஆற்றலின்றிப் பணம் வைத்திருந்தும் தொண்டுள்ளம் கொள்ளாது ஏழைகளுக் குதவாதுள்ள சமயத்தலைவர்கள், சமயத்தாபனங்களை நோவதா? ஒவ்வொருவரும் சிறிது சிந்தித்துப்பார்மின்.

சென்றதை நினைத்தாவது வருங்காலத்து விழிப்பா யிருமின். நம் சமய மக்களுக்கு அனுதையில்லம், கல்வி நிலையம், மருத்துவ வசதி முதலியவைகளை அவர்களைப்

போன்று சமயப்பரப்பு நோக்கோடு அரும்பெருஞ்செல்வர்கள் செய்ய முயல்வார்களாக. மேலும்,

நாகர்கோயில் திரு ஆறுமுக நாவலர் அவர்கள் போன்றும் மதுரைத் திருஞானசம்பந்தராதீனத்துச் சுவாமிகள் போன்றும் பிற மதத்துச் சேர்ந்தவரை நம்பால் சேர்த்துக் கொள்ளவும் முயற்சிகள் இக்காலத்து மிகவும் அவசியம் வேண்டற்பாலன.

'திருவாளன் திருநீறு திலகவதியார் அளித்துச்'' சமண சமயம் புக்க மருணீக்கியாரைத் திருநாவுக்கரசராக்கவில்லையா? ஆகவே ''இராமன் ஆண்டால் என்ன இராவணன் ஆண்டால் என்ன'' என்பது போன்ற அசட்டுப் பழமொழிகளைக் கூறிப் பராமுக நோக்குக் கொண்டிராது நம் சமய மேம்பாடு, நம் சமயக் கொள்கை விளக்கங்கள் முதலியனவற்றை ஏழை மக்களிடையே பரப்ப வேண்டும். பரப்பி நம் சமயத்திலிருந்து பிற மதம் புக விரும்பாச் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். மேலும் பிற மதம் போனவர்களைத் தள்ளி வைத்தல் முதலிய கொடுந்தண்டனைக்குள்ளாக்காது அவர்களை மறுபடியும் நம் மதத்துக்கு வரும்படிச் செய்து ஆட்கொள்ள வேண்டுவது மிகவும் தலையாய தொண்டாகும். தற்போதும் இவ்வாறு மத மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை அவ்வெளியீட்டிலிருந்து தெரிகிறோம். ஆகவே நம் சமயப் பெருஞ்செல்வர்கள், சமய நிலையங்கள் முதலியன தாம் இதனைத் தடுக்க வேண்டிய வழிவகைகளைக் கோல வேண்டும்.

''வித்தகம் பேச வேண்டாம் பணி செய்ய வாரும்'' என்பது நம் அருட்குரவர் அறிவுரை. ஆகவே அப்பொன்னுரைப்படி தற்காலத்துச் செயல்களே மிகத் தேவைப்படுகின்றனவாதலின் தொண்டுள்ளம் கொண்மின்! சமயப் பணியிலீடுபடுமின் !!

(அம்பை சங்கரன்)

கார்த்திகை மாத விசேட தினங்கள்

4 (19-11-65) ஆனாய நாயனார் விழா
10 (25-11-65) மூர்க்க நாயனார் விழா
11 (26-11-65) சிறப்புலி நாயனார் விழா
22 (7-12-65) கணம்புல்ல நாயனார் விழா
,, ,, கார்த்திகை தீப விழா
30 (15-12-65) மெய்ப்பொருள் நாயனார் விழா

நம் சமாஜப் பேரன்பர் வித்துவான் திரு. க. வெள்ளை வாரணனார் அவர்கள் தமையனார் மகன் திருவளர்செல்வர் இளங்கோவுக்கும் காஞ்சிபுரம் திரு K. R. குட்டியப்ப முதலியார் மகள் திருமதி வசந்தலட்சுமிக்கும் திருமணம் 7—11—65ல் கச்சியில் சிறப்புற நிகழ்ந்தது. புது மண மக்கள் எல்லா நற்பேறுகளுமினிதுற்று நீடு வாழ இறைவன் துணைகொண்டு வாழ்த்துகிறோம்.

கூறைநாடு, தனியூர் சிவனடியார் திருக்கூட்டம் ஆதிவார வழிபாடு 11ஆம் ஆண்டு நிறைவு விழா (19—9—65) ஞாயிறு மாலை ஸ்ரீ புழுகீசர் ஆலயத்தில் சிறப்புற நிகழ்ந்தது. அன்று காலையில் சீலஸ்ரீ மீனாட்சிசுந்தரதேசிக சுவாமிகள் தலைமையில் 56-சிவபூசகர்கள் ஒருங்கிருந்து சிவபூசை செய்தார்கள். பின்னர் திருமுறை வீதி உலா முடியவும் வழிபாடு நடந்தது. மாலையில் சென்னை தர்மபுர ஆதீனம் சமயப்பிரசார நிலையம், தவத்திரு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் தலைமையில் வித்துவான் தா. ம. வெள்ளைவாரணம், சொ. சிங்காரவேலனார் ஆகியோர் சமயச் சொற்பொழிவாற்றினார்கள். நன்றியுரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

தாம்பரம் ஸ்ரீ கற்பக விநாயகர் பக்த ஜன சபை ஆதரவில் 26—9—65 அன்று மாலை அபிராமி அந்தாதி பதிப்பாசிரியர் உயர்திரு க இராமநாதப் பிள்ளையவர்கள் ''அபிராமி அந்தாதி'' பற்றிச் சிறந்த சொற்பொழிவாற்றினார்கள். சித்தாந்தம் ஆசிரியர் திரு மு. அருணாசலம் அவர்கள் ''பக்தி நெறி'' என்ற பொருள்பற்றி விளக்கி ஒரு அரிய விரிவுரையாற்றினார்கள்.

மயிலம் சிவசுப்பிரமணிய சுவாமி தேவத்தானத்தில் கந்தர் சஷ்டி விழா 25—10—65 முதல் 31—10—65 முடிய சிறப்புற நிகழ்ந்தது. மயிலம் முருகன் செந்தமிழ்க் கழக ஆதரவில் தினந்தோறும் சொற்பொழிவுகளும் நிகழ்ந்தன.

சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் கந்தர் சஷ்டி விழா மிகச் சிறப்புற நிகழ்ந்தது. 25—10—65 முதல் 1—11—65 முடிய கயப்பாக்கம் திரு சோமசுந்தரஞ் செட்டியார், திரு அ. ச. ஞானசம்பந்தம், M.A., திரு ஆர். சோமசுந்தரம் ஐயர், திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை B.A., L.T., திரு ச. சிவகுமாரன், M.A., திரு கீ. இராமலிங்க முதலியார், M.A., திரு புலவர் முருகவேள், M.A., M.O.L., திரு கி. வா. ஜகந்நாதன், M.A. ஆகியோர் முறையே முருகன் சிறப்புக் குறித்துப் பல்வேறு தலைப்புகளில் சிறந்த முறையில் சொற்பொழிவாற்றினர்.

புரசைத் திருநெறிக்கழக 56ஆம் திங்கள் வழிபாடு 31—10—65 மாலையில் தங்கசாலைத் தெரு நாட்டு செல்வ விநாயகர் கோயிலிலும் ஸ்ரீ செங்கழுநீர் விநாயகர் கோயிலிலும் சிறப்புற நிகழ்ந்தது.

நம் சமாஜத் துணைச் செயலாளர் திரு மு. நாராயணசாமி முதலியார் அவர்களின் அண்ணியார் திருமதி ஆண்டாள் அம்மையார் அவர்கள் 14—10—65 அன்று இறைவன் திருவடிநீழலடைந்தமை குறிந்து வருந்துகின்றோம். அன்னோர் ஆன்மா இறைவன் தண்ணருள் பெற்றின்புற்றிலங்கி அருள எல்லாம் வல்ல பரம்பொருளின் திருவடிக் கமலங்களை வாழ்த்தி வணங்குகின்றோம்.

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

சமாஜ உறுப்பினர்கள் தங்கள் சந்தாத்தொகை ரூபாய் மூன்றை டிசம்பர் மாதம் 31—12—65க்குள் அனுப்பிவைக்க வேண்டுகின்றோம். வி. பி. பி. யில் ஜனவரி மாத இதழை அனுப்புவதாயின் 75 புதுக்காசுகள் வீணாக அதிகம் செலுத்த வேண்டியிருக்கும். மணியார்டர் மூலம் சந்தா அனுப்புவோர் 1. தங்கள் முழுப்பெயர், 2. சந்தா எண், 3. தெளிவான முழு விலாசம் ஆகியவற்றைக் குறித்தனுப்புதல் வேண்டும்.

ஈழநாட்டில் உள்ள அன்பர்கள் அரசியலார் இசைவு பெற்றுத் தங்கள் சந்தாத் தொகையினை தவறாது அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்கிறோம்.

மலேசியா நாட்டில் உள்ள சமாஜ அன்பர்கள் தங்கள் சந்தாத் தொகையை திரு. கே. இராமநாதன் செட்டியார், B. A., B. L., அவர்களிடத்துச் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பெறுகிறார்கள். சந்தா அனுப்பவேண்டிய முகவரி:

செயலாளர், சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கீழ மாட வீதி, மயிலாப்பூர், சென்னை-4.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian St., Madras-1 by V. Sambandan, Edited by M. Arunachalam, M. A., and Published by S. Satchidanandam Pillai, B. A., L. T., for the Saiva Siddhantha Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.